**தலைப்பு 11 – நிதி ஆணைக்குழு அலுவலகம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

நிதி ஆணைக்குழு அலுவலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதி ஆணைக்குழு அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 மே 31 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் நிதி ஆணைக்குழு அலுவலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஒக்தோபர் 05 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக் கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி ஆணைக்குழு அலுவலகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு அலுவலகத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாகவும்.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

## 2. செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது 2002 ஆம் இலக்க செலவின விடயத்திறகாக செலவிடப்பட்டிருந்த ரூபா 300,000 ஆன நிதிஏற்பாடுகளில் இருந்து எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் அந் நிதிஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடுகள் சாத்தியமானளவு சரியானதாக தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் செலவின விடயத்தின் கீழ் பாரியளவிலான இயந்திர திருத்தங்கள் திட்டமிடப்பட்ட பிரகாரம் இடம்பெறாமல் இருந்ததுடன் அரசினால் செலவின முகாமைத்துவத்திற்கு ஆலோசணை வழங்கியிருந்தமையால் குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் செலவினம் கட்டுப்படுத்தப்பட்டது. |
| (ஆ) மீளாய்வாண்டில் 05 செலவின விடயங்களுக்கான ஒதுக்கீடு செய்த ரூபா 6.8 மில்லியன் தேறிய நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பயன்பாட்டின் பின்னர் ரூபா 3.00 மில்லியன் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அச்சேமிப்பு ஒதுக்கீடு செய்த தேறிய நிதி ஏற்பாட்டின் 25 சதவீதம் முதல் 59 சதவீதம் வரையான வீச்சில் நிலவின. | மதிப்பீடுகள் சாத்தியமானளவு சரியானதாக தயாரிக்கப்பட வேண்டும். | இயந்திரங்கள் பொறிகள் மற்றும் அத்தியவசியமற்ற செலவினங்களை பிற்போடப்பட்டமை உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கியமை, திருத்த வேலைகள் இடம்பெறாமை, அத்தியவசிய பயிற்சி நிகழ்ச்சிகளுக்காக மாத்திரம் வரையறுக்கப்பட்டமை மற்றும் செலவினம் முகாமைத்துவத்திற்காக அரசின் ஆலோசணைகள் காரணமாக இருந்தன. எதிர்காலத்தில் நிதி |

| | | | |
|---|---|---|---|
| | | | ஏற்பாடுகளைத் திட்டமிடும் போது இது தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. |
| (இ) | 13 செலவின விடயங்களுக்கான ஆரம்ப செலவின மதிப்பீட்டிற்கு ஒப்பாக திருத்திய செலவின மதிப்பீட்டின் வேறுபாடு 29 சதவீதம் 30 முதல் 100 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது. | மதிப்பீடுகளை இயலுமானவரை சரியானதாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | விசேட கடமை தேவைகள் காணப்பட்டமை மற்றும் மேலதிக நேர கொடுப்பனவுகள் அதிகரித்தமை 1/3 படிகளுக்காக அங்கீகாரம் கிடைக்காமை, சாரதி படிகள் அதிகரித்தமை, புதிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டமை, எழுதுகருவிகள் மற்றும் பாவனைப் பொருட்கள் தேவைகள் அதிகரித்தமை, பதிய கட்டிடத்திற்கு வந்தவுடன் செலவினங்கள் வேறுபட்டமை, சுற்றறிக்கை மூலம் செலவினங்கள் முகாமை செய்யப்பட்டமை மற்றும் எஞ்சிய நிதிஏற்பாடு வேறு தேவையான செலவினங்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தமை காரணங்களாக இருந்தன. |

**2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் 2020 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 78,627 தொகை பொறுப்பின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | சரியாக நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | தாமதம் காரணமாக பொறுப்புக்கள் கூற்றில் பதிவு செய்யப்படவில்லையென தயவுடன் அறிய தருகின்றேன் . |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆணைக்குழு அலுலகத்தினால் கையேற்கப்பட்ட அல்லது ஏனைய நிறுவனங்களிலிருந்து கிடைத்திருந்த பொருட்களுக்குரிய பொருள் | குறித்த சொத்துக்கள் பெறுவனவு, கொள்வனவு, அகற்றுதல் மற்றும் கையளித்தல் சரியாக அறிக்கைகளில் | 2019 இன் பொருள் மெய்மையாய்வு அறிக்கையினல் மிகையாக குறிப்பிடப்படும் 3 பொருள் வகையின் 11 இதுவரை |

| | | |
|---|---|---|
| பதிவேட்டிற்கு உட்படுத்தும் செயற்பாடு சரியாக நிறைவேற்றாமை காரணமாக பொருட்கள் பரிசோதனையின் 03 பொது வகை பொருட்களுக்குரிய 11 அலகுகள் தொடர்பாக மிகைகள் அவதானிக்கப்பட்டன. பொருள் மிகைகள் தொடர்பாக முன்னைய ஆண்டின் அறிக்கைகளிலும் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளன. | வெளிப்படுத்தப்பட வேண்டும். | பொருட்களுக்குரிய பொருள் பதிவேட்டிற்கு உட்படுத்தியுள்ளதுடன் 2018 ஆம் ஆண்டில் காணப்பட்ட மிகை மற்றும் பற்றாக்குறை 2019 ஆம் ஆண்டில் கணக்குகளுக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

**3.2. செயற்பாடுகளை நிறைவேற்றாமை**

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(ன) (6)பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு தனது செயற்பாடுகளை தீர்மானிக்க வேண்டிய போதிலும் 2019 ஆம் ஆண்டின் போதும் அவ்வாறானதொன்று தயாரிக்க முடியாதிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | செயற்பாட்டுக் கோவையை தயாரிப்பதன் மூலம் எதிர்பார்த்த இலக்கினை அடைந்து கொள்ள வேண்டும் | அரசியலமைப்பின் 154(ன) (6) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு செயற்பாடுகளை நிறைவேற்று வதற்கு வழிகாட்டல் கோவையொன்றை தயாரித்துக் கொள்ளல் வேண்டும். 154(ன) (3) மற்றும் 4 (அ) மற்றும் (ஆ) பிரிவின் மூலம் குறிப்பிடப் பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக தேவைப்பாடுகளை மதிப்பிடும் செயற்பாடு வருடாந்தம் தயாரிக்கப்படுவதுடன் அதன் பிரகாரம் மாகாணங்களுக்கு தேவை தேவையான மூலதன மற்றும் மீண்டெழும் தேவைப்பாடுகள் மதிப்பீடு செய்து உரிய பரிந்துரைகள் அரசாங்கத்திற்கும் அதிமேதகு ஜனாதிபதிக்கும் சமர்ப்பிக்கப்படுகின்றன. |
| (ஆ) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நிதி ஆணைக்குழு சட்டத்தை தயாரிக்கும் செயற்பாடு உள்ளடக்கப்பட்டிருந்த போதும் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரை அதன் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படவில்லை. | இந்நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு பொறுப்பு வாய்ந்தவர்களின் கவனம் செலுத்தப் பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையில் நிதி ஆணைக்குழு சட்டம் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்துடன் கலந்துரையாடி மீண்டும் திருத்த வரைவொன்றை தயாரிப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண அபிவிருத்தி திட்டங்களை தயாரிக்கும் போது நிலைபேறான அபிவிருத்தி இலக்கினை அடிப்படையாக கொண்ட திட்டமடல் செயற்பாடொன்று இடம் பெற்றிருந்த போதும் அபிவிருத்தி திட்ட மீளாய்வின் போது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான செயலாற்றல் அறிக்கையின் தகவல்கள் உள்ளடக்கப்பட்டு பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட்டமை அவதானிக்கப்படவில்லை. | அபிவிருத்தி திட்ட மீளாய்வின் போது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். | ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறை வேற்றும் போது அனைத்து மாகாணங்களின் செயன்முன்னேற்றம் மீளாய்வொன்று செய்யப்படாமையால் மாகாண சபையால் பெற்றுக் கொண்ட அபிவிருத்தி முன்னேற்றம் தொடர்பாக பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்படுவதில்லை. எவ்வாறாயினும் தேவைக்கேற்றவாறு அறிவினை பெற்றுக் கொள்வதற்காக எழு மாதிரியாக தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்தி இலக்குகள் ஆராயப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றன. |

## 3. மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது ஆணைக்குழு அலுவலகத்தின் சிரேஷ்ட நிலையில் 4 வெற்றிடங்களும் இரண்டாம் நிலையில் 17 வெற்றிடங்களும் உள்ளடங்கலாக 30 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது தேவையில்லாவிட்டால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மீளாய்வு செய்வதற்கு சாத்தியமற்றிருந்தது. | உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்களை பெற்றுத்தருமாறு பொது நிர்வாக அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அபிவிருத்தி உத்தியோகத்தர் வெற்றிடங்களுக்காக தற்போது பயிற்சி பெறும் பட்டதாரிகள் இணைக்கப்பட்டுள்ளதுடன் அந்த அத்தியவசிய பதவிகள் அரசின் கொள்கையின் பிரகாரம் மிக விரைவில் நிரப்புவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் |